In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam

CC.No.337/2019

PW–1

Date :–06.03.2025

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராஜசேகரன் | Caste | |
| த/பெ. | விஸ்வநாதன் | Calling | மத்திய அரசு பணி ஓய்வு |
| Village | பழுர் | Religion | |
| Taluk | திருச்சி | Age | 64/2025 |

அரசு தரப்பில் முதல் விசாரணை-

நான் தற்போது சென்னை திருவான்மியுரில் வசித்து வருகிறேன் . சம்பவம் சமயத்தில் நான் திருச்சியில் வசித்து வந்தேன். கடந்த 24.10.2011 ம் தேதி நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது எனக்கு எனது அ.சா.1 எனது மனைவி உஷா போன் செய்து தனது செயின் பழுர்வீட்டின் அருகே நடந்து வந்துகொண்டிருக்கும்போது பறித்துவிட்டதாக தகவல் கூறினார். உடனே நான் வீட்டிற்கு வந்தவுடன் எனது மனைவியிடம் நடந்த விவரத்தை கேட்டபோது ஒரு நபர் செயின் பறித்ததாகவும் மற்றொரு நபர் இருசக்க வாகனத்தில் தயார் நிலையில் இருந்தார் என்றும் சொன்னார் அதன்பிறகு நானும் எனது மனைவியும் கொள்ளிடம் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம் . அந்த புகாரை எனது மனைவி சொல்ல , சொல்ல, நான் தான் எழுதினேன். அதை படித்து பார்த்து எனது மனைவி கையொப்பம் செய்தார். அதன்பிறகு போலீசார் விசாரணை செய்தனர் . பிறகு சுமார் ஒரு மாததத்திற்கு பிறகு நகை கிடைத்துவிட்டதாக போலீசார் தகவ்ல தெரிவித்தனர். அதன்பிறகு அந்த நகையை நாங்கள் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டோம் . இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர் . எனது

Vaoa

மனைவிதான் செயின் பறித்த நபரை பார்த்தார் . அவருக்கு அடையாளம் தெரியும். வழக்கு சம்பந்தமாகபோலீசார் விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது . எனது மனைவி சொல்லிதான் எனக்கு தெரியும் . எதிரியின் அடையாளம் எனக்கு தெரியுமா என்றால் எனது மனைவிக்குதான் தெரியும்.

Sd/-xxxx

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made her signature

Sd/-xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

Advocatekhoj

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**
**CC.No.337/2019**
**PW-1**

**Date :-06.03.2025**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. உஷா | Caste | |
| க/பெ. | திரு.ராஜசேகரன் | Calling | வீட்டுக்குடிதனம் |
| Village | பழூர் | Religion | |
| Taluk | திருச்சி | Age | 57/2025 |

அரசு தரப்பில் முதல் விசாரணை-

நான் தற்போது சென்னை திருவான்மியூரில் வசித்து வருகிறேன் . சம்பவம் சமயத்தில் நான் திருச்சியில் வசித்து வந்தேன் . ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 24.10.2011 ம் தேதி நான் வீட்டிலிருந்து காந்தி மார்கெட் சென்றுவிட்டு திரும்பி வீட்டிற்கு பஸ்சில் வந்தேன் . பிறகு பழூரில் ஸ்டாப்பில் இறங்கி வீட்டிற்கு இரண்டு பைகளில் காய்களை வைத்துக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தேன் . அப்போது வீட்டிற்கு செல்லும் அருகே உள்ள இறக்கத்தில் நடந்து வந்துகொண்டிருந்தபோது அப்போது ஒரு நபர் போன் பேசிக்கொண்டு இருந்தார் அப்போது அந்த நபர் என்னிடம் முகவரி கேட்பதற்கு போல் கேட்டார் . நான் அவரை பார்த்தேன். அந்த நபர் தற்போது நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரிதான் . அப்போது ஆஜர் எதிரி உடனே எனது கழுத்தில் அணிந்திருந்த சுமார் 4 பவுன் மதிப்புள்ள தங்க செயினை பறித்துக்கொண்டு ஏற்கனவே சிறிது தூரத்தில் ஒரு நபர் இருசக்கர வாகத்தை ஸ்டார்ட் செய்து வைத்துக்கொண்டிருந்த வாகனத்தில் ஆஜர் எதிரி ஓடிபோய் உட்கார்ந்தவுடன் இருவரும் சென்றுவிட்டனர் . நான் உடனே ஆஜர் எதிரியை பிடிக்க கத்தினேன் என்னால் ஓடிபோய் பிடிக்கமுடியவில்லை . உடனே அதன் பிறகு நான் எனது வீட்டிற்கு சென்று அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் கூறிவிட்டு எனது கணவருடன் கொள்ளிடம் காவல் நிலையத்தில் ஒரு எழுத்துமூல புகாரை அளித்தேன் . என்னிடம் காட்டப்படும் அந்த புகார் நான் சொல்ல , சொல்ல எனது கணவர் எழுதினார். அந்த எழுத்துமூல புகார் ஆவணம் அ .சா.ஆ-1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. சில நாட்களுக்கு பிறகு செயின் கிடைத்துவிட்டதாக போலீசார் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள் அதன்பிறகு நான் காவல் நிலையம் சென்று அங்கு எனது செயினை அடையாளம் காட்டின் .பின்னர் நீதிமன்றத்தில் மனு

செய்து எனது செயினை பெற்றுக்கொண்டேன் . அந்த செயினை நான் இன்று நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன் . அந்த செயினை தற்பபோது திறந்த நீதிமன்றத்தில் சாட்சி காண்பித்தார் . அந்த செயின் அ.சா.பொ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. செயினின் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நடந்த விவரம் கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

பழுர் பஸ்டான்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் நடந்து சென்றுகொண்டிக்கும்போது சம்பவம் நடைபெற்றது என்றால் 2 நிமிடம் நட ந்து சென்றால் சிறிது துரம் . சம்பவ இடத்தில் பொது ஜனம் நடமாட்டம் உண்டு. செயினை பறித்துக்கொண்டபோது செயின் அறுந்துவிட்டது . நான் சத்தம்போட்டபோது மதியம் நேரம் என்பதால் ஆட்கள் அந்த இடத்தில் இல்லை . இருசக்கர வாகனம் ஓட்டியவர் எனக்கு முன்பாக சிறிது தூரத்தில் நின்று கொ ண்டு இருந்தார் . அந்த வண்டியின் எண் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எதிரியை காவல் நிலையத்தில் பார்க்கவில்லை . நகையை நீதிமன்றத்தில்தான் வாங்கினேன். நான் சொல்வது சம்பவம்நடக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல . ஆஜர் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால்ச ரியல்ல . சொன்ன, தேதியில், நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சான்றுபொருள் இது இல்லை என்றால் சரியல்ல.

Sd/-xxxx
Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made her signature

Sd/-xxxx
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.